egistered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 399 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஐப்பசி 2 ஆம் நாள் ஜ. ஆகிர் பிறை 12 19-10-64 திங்கட்கிழமை இதழ் 250

தீபாவளி பண்டிகையை
முன்னிட்டு சிறந்த பிடவைகள்
மலிவாக விற்கப்படுகிறது
உடன் விஜயம் செய்யுங்கள்!
கணேசன் ஸ்டோர்ஸ்
78, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

"தமிழர் சம்பந்தமாக

# அரசாங்கபோக்கில் எவ்வித மாற்றமும் இல்லை

## இதுவரை வாக்குறுதி ஒன்றும் நிறைவேற்றப்படவுமில்லை"

### தமிழரசு செயற்குழு கண்டனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று கூடிய தமிழரசு செயற்குழுக் கூட்டம், தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கண்டனம் தெரிவித்துள்ளது. அது நிறைவேற்றியுள்ள சில தீர்மானங்கள் வருமாறு:-

வருடாவருடம் தமிழ் மொழிக்கு உரிய இடம் கொடுக்கப்படும் என அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தும் அதையிட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறிவிட்டதை இச் செயற்குழு ஆழ்ந்த கவலையுடன் கவனிக்கிறது.

தமிழ்மொழி விசேஷ பாவிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஆறு ஆண்டுகளாகியும் ஒரு சிறு சலுகைகள் கூட அமுலுக்கு வராமல செல்லாக் காசாகிவிட்டது. சிங்களத்தை தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குள் திணிக்க முடியாத இடங்களில் சிங்கள மக்களுக்கு உதவாத ஆங்கிலத்தை தமிழ் பேசும் மக்களின் நிர்வாகமொழியாக உபயோகிப்பதையே தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது. தமிழை ஒரு தீண்டத்தகாத மொழியாகக் கருதிவருகின்றது. சிங்களமக்களுக்குச் சிங்களம் எப்படியோ தமிழ்பேசும் மக்களுக்குத் தமிழ் அப்படியே இருக்கவேண்டுமென

(6-ம் பக்கம் பார்க்க)

## விபத்துபற்றி ஆராய விசாரணைக் கமிஷன்

### நஷ்டஈடும் வழங்கப்படும் என அறிவிப்பு

கொழும்பு, ஞாயிறு

மீரிகமத்துக்கும் அம்பேபுஸாவுக்குமிடையே கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்ற பயங்கர ரயில்விபத்து குறித்து முழு விசாரணை நடாத்த பொது விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று போக்குவரத்து மந்திரி திரு அனில்முனசிங்கா அறிவித்துள்ளார்.

விபத்தில் சிக்கி உயிரிழக்கவர்களுக்கும் படுகாயமடைந்தவர்களுக்கும் விரைவில் நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் போக்குவரத்துமந்திரி திரு. அனில்முனசிங்கா அறிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் சடலங்களைப் பாதுகாத்து வைக்க விசேஷ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. காயமடைந்தவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும், அளிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படியான விபத்துக்கள் இனிமேல் நடைபெறுமல் தடுக்க சகல நடவடிக்கைகளும் கைக்கொள்ளப்படும் என்று மந்திரி அனில்முனசிங்கா உறுதியளித்துள்ளார்.

## கவர்னர் ஜெனரல், மந்திரி அனில் அனுதாபம்

கொழும்பு, ஞாயிறு

மீரிகமத்துக்கருகே ஏற்பட்ட பயங்கர ரயில் விபத்து குறித்து கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

"இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்த, காயமடைந்தவர்களின் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாக" கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து மந்திரி திரு. அனில்முனசிங்காவும் ரயில் விபத்து குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ளார்.

## காயமடைந்தவர்களைப்பார்க்க இலவச ரயில் வசதி

கொழும்பு, ஞாயிறு

தலைமன்னார் கோர ரயில் விபத்தில் காயமடைந்து தற்பொழுது கொழும்பில் சிகிச்சை பெறுபவர்களைப் பார்க்க இங்கு வரும் உறவினர்களுக்கு இலவச புகையிரத வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களின் உறவினர்கள் கொழும்புக்கு வரவும் திரும்பவும் வேண்டிய செலவுகளை வழங்க ரயில்வே பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது காய

(5-ம் பக்கம் பார்க்க)

பம்பாய்க்கு

## நவம்பர் 28-ல் பாப்பரசர் விஜயம்

வத்திக்கான், அக். 18

வருகிற நவம்பர் 28-ம் திகதி பம்பாயில் நடைபெறவிருக்கும் சர்வதேச யுகாரிஸ்ட் மகாநாட்டில் கலந்து கொள்ளும்பொருட்டு தாம் இந்தியா செல்லப்போவதாய் பரிசுத்த பாப்பாண்டவர் இன்று அறிவித்தார். இந்தமகாநாடு டிசம்பர் 6-ம் திகதி வரை நடக்கும். போப்பாண்டவர் சில தினங்கள் மட்டுமே இந்தியாவில் தங்குவார் என்றும், அதுவும் பம்பாயில் மட்டுமே தங்குவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

## ஸ்ரீமதி பண்டிட் ராஜிநாமா

பம்பாய், அக். 18

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் மகாராஷ்டிர கவர்னர் பதவியிலிருந்து விலகும் ராஜிநாமாவைச் சமர்ப்பித்திருக்கிறார். ஜனாதிபதி ராதாகிருஷ்ணன், தாம் வருத்தத்துடன் இந்த ராஜிநாமாவை ஏற்றுக்கொள்வதாக அறிவித்திருக்கிறார்.

கிரிக்கெட் டெஸ்ட்

## ஆஸி: 174 இந்தியா 5: 130

கல்கத்தா, அக். 8

இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெறும் மூன்றாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்டில் ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 174 ஓட்டங்கள் பெற்றிருக்கிறது. டுராணி 73 ஓட்டங்கள் கொடுத்து ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கின்றார்.

இன்றுகாலை 11-05க்கு ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை நிறுத்தியது. இதன் பின்னர் விளையாடத்தொடங்கிய இந்தியா ஆட்ட இறுதியில் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 130 ரன்கள் எடுத்தது. நட்கர்ணியும், பட்டோடியும் தங்கள் ஆட்டத்தை நாளை தொடர்ந்து விளையாடுவார்கள்!


மலிவு விற்பனை
எல்லாப் பொருட்களின்
விலைகளும் குறைக்கப்பட்டிருக்கின்றன.
15 - 10 - 64 தொடக்கம் 25 - 10 - 64 வரை
100 ரூபாவுக்கு மேல் சாமான் எடுக்கும் முதல் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு
மூன்று விலையுயர்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
ஆ. அப்பையா அன் கோ.,
82, காங்கேசன்துறை வீதி,
கிளை: 54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
போன்: 506
தந்தி: 'வணக்கம்'

மலிவு விற்பனை
19-10-64 — 2-11-64

| | வழ. விலை | மலி. விலை |
|---|---|---|
| 'நைலக்ஸ்' சேலைகள் | 47-50 | 40-00 |
| 'பிரின்டட்' சேலைகள் | 60-00 | 50-00 |
| 'ரிஸ்யூ' சேலைகள் (பெரிய சருகை முந்தி) | 75-00 | 50-00 |
| 'டர்லின்' சேலைகள் (பெரிய சருகை முந்தி) | 67-50 | 40-00 |

கோயம்புத்தூர், கோடம்பாக்கம் சேலைகள்
மற்றும்
உயர்தர பிடவை வகைகளும்
மலிவாக பெற்றுக்கொள்ளலாம்

சீப்சைட்
186, 188, கே. கே எஸ் ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 479

### மணிவாக்கு

"என் சீடராக இருக்க உனக்கு விருப்பமாயின், முனக்கமின்றிப் பீரங்கிக்கு முன்னும் நிற்கத்தான் வேண்டும். உனக்குத் துயரம் எப்போது வரினும், என்னை அழைத்திடுக. யான் எங்கிருந்தாலும், உன் குரல் என் காதில் விழும்."

— சுவாமி விவேகானந்தர்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஐப்பசி மீ 3 உ (19-10-64)


## கோரவிபத்து

சென்ற சனிக்கிழமை காலை மீரிகமத்துக்கு அருகில் நிகழ்ந்த கோர ரயில் விபத்தும் நாகொடையிலும் மடுவீதியிலும் நிகழ்ந்த பஸ் விபத்துக்களும் பல உயிர்களைப் பலிவாங்கியிருப்பதுடன் பலரைப் படுகாயப்படுத்தியுமுள்ளன. இச் சம்பவங்கள் பற்றி அரசாங்கம் உடனடியாகத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மீரிகமை ரயில் விபத்தில் இதுவரை 28 பேர் மாண்டதாகவும் உயிர்ச்சேதம் அதிகரிக்கலாமென்றும் செய்திகள் கூறுகின்றன. இவ்விபத்துக்கு சரியான காரணம் என்ன என்பது தெரியவில்லை. நாகொடையில் இரண்டு பஸ்கள் மோதிக்கொண்டதால் 47 பேர் படுகாயமடைந்ததாகவும் மடுவுக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு பஸ் மரத்துடன் மோதியதால் 16 பேர் பலத்த காயமடைந்ததாகவும் மற்றுமொரு செய்தி கூறுகிறது. இவ்விபத்துக்கள் பற்றியும் உண்மையான காரணம் இன்னும் தெரியவில்லை.

ரயில்விபத்து நிகழ்ந்த இடத்துக்கு போக்குவரத்து அமைச்சரும் ரயில்வே ஜெனரல் மனேஜரும் ரயில்வே அதிகாரிகளும் விரைந்துசென்றுள்ளதாகவும் விபத்துபற்றி விசாரணை நடைபெறுவதாகவும் அறிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்களுக்கு உதவி அளிப்பதிலும் சிகிச்சை அளிப்பதிலும் இரத்ததானம் செய்வதிலும் பொதுமக்களும் இதர அதிகாரிகளும் பொலிசாரும் செய்யும் சேவை பாராட்டுக்குரியது.

1928-ம் ஆண்டிற்குப்பின் இதுபோன்ற கோரவிபத்து எதுவும் நிகழ்ந்ததில்லை. சென்ற சில வருடங்களாக ரயில், பஸ் விபத்துக்கள் அடிக்கடி நிகழ்ந்துவந்துள்ளன. சிறு விபத்துக்கள் பற்றி ரயில்வே அதிகாரிகளோ போக்குவரத்துச் சபையோ சரியான முறையில் விசாரணைசெய்து அதை பொதுமக்களுக்குத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. ரயிலும் பஸ்ஸும் வசதிகுறைந்த எளியமக்கள் பிரயாணம் செய்யும் வாகனங்கள். வசதியுடையவர்கள் சொந்தக்காரிலோ, வாடகைக் காரிலோ சுகமாகச் சவாரி செய்ய முடியும். வசதிகுறைந்த எளியமக்கள் தங்கள் பிரயாணத்துக்கு நம்பியிருக்கும் ரயிலும் பஸ்ஸும் சரியான முறையில் சேவை செய்யவேண்டியது அவசியம். ரயில் சேவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. சென்ற சில வருடங்களாக பஸ்சேவையும் அரசாங்கத்தின் பொறுப்பில்தான் இருந்துவருகிறது. எனவே பொதுமக்களின் குறிப்பாக எளியமக்களின் பிரயாணத்துக்கு பாதுகாப்பளிக்கவேண்டியதும் அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதமளிக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமை.

இதுவரை நிகழ்ந்த சிறிய விபத்துக்கள் பற்றிக்கூட ரயில்வே அதிகாரிகளும் போக்குவரத்துச் சபை அதிகாரிகளும் தகுந்த முறையில் விசாரணைசெய்து உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் நேற்று முன்தினம் நிகழ்ந்த இந்த மூன்று துரதிர்ஷ்ட விபத்துக்களும் நடைபெறுமல் தவிர்த்திருக்கலாம். மீரிகமையில் நிகழ்ந்த கோரவிபத்து பற்றியும் மற்றும் இரு விபத்துக்கள் பற்றியும் சரியானமுறையில் விசாரணை செய்யப்படவேண்டும். விபத்தின் காரணங்கள் பற்றி அறிந்து அதுபற்றிப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். ரயில்வே அதிகாரிகளையோ, போக்குவரத்துச் சபை அதிகாரிகளையோ இவ்விசாரணைக்குப் பொறுப்பாக விடுவதைவிட பாரபட்சமற்ற கமிஷன் ஒன்றை நியமிப்பதேமேல் இவ்விபத்துக்கள் சம்பந்தமாக போக்குவரத்து அமைச்சர் திரு. அனில்மூனசிங்கா உறுதியான நடவடிக்கை எடுப்பாரென்றும் விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் குடும்பங்களுக்கும் வெறும் அனுதாபம் தெரிவிப்பதுடன் நில்லாது நிவாரண உதவி அளிக்க முயற்சிசெய்வாரென்றும் எதிர்பார்க்கிறோம்.

விபத்துபற்றி விசாரணை செய்ய பாரபட்சமற்ற கமிஷன் ஒன்று நியமிக்கப்படுமென்றும் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமென்றும் கடைசியாகக் கிடைத்த அறிவிப்பு ஒன்று கூறுகிறது. இதற்காக போக்குவரத்து அமைச்சரைப் பாராட்டுகிறோம்.

ஆசிரியருக்குக் கடிதம்

# சம்பள முரண்பாட்டுச் சபை அறிக்கையும் திறைசேரியும்

அரசினர் உத்தியோகத்தர்களதும், ஆசிரியர்களதும் சம்பளத் திட்டம் காலத்துக்குக் காலம் மாற்றியமைக்கப்படுவது ஒரு நியதி அந்நியதிப்படி கடைசியாய் மாற்றியமைக்கப்பட்டருப்பதும், இன்றைக்கும் நடைமுறையிலிருப்பதும் "போலியர்ச்" சபையாரின் சம்பளத் திட்டமேயாம். இச்சம்பளத்திட்டம் சிலபல திருத்தங்களுடன் 1-4-55-ல் அமுல் செய்யப்பட்டு நடைமுறையிலிருந்து வருகின்றது. இச்சம்பளத் திட்டத்தின்படியே மகாதேசாதிபதி முதற்கொண்டு ஒரு தாழ்ந்த பதவியைச் சேர்ந்த உத்தியோகத்தன் ஈறாக தத்தமக்குரிய சம்பளத்தை இன்றும் பெற்று வருகின்றனர். எனவே 1-4-55-ன் பின் ஒரு சம்பளத் திட்டமும் நடைமுறைக்கு வந்திலது.

போலியர்ச் சபையாரின் சம்பளத் திட்டமும் அதன் திருத்தங்களும் அமுலாக்கப்பட்ட பின்னும் அதற்கு முன்னிருந்த அதாவது 1-1-46 க்கும் 1-4-55 க்கும் இடைப்பட்ட காலத்தில் சேவையிலிருந்த சில உத்தியோகத்தர்களதும் சில ஆசிரியர்களதும் சம்பளத்திலும் சம்பள விகிதங்களிலும் முரண்பாடுகளும், தாரதம்மியங்களும் காணப்பட்டனவென்றும் அவற்றைப் போலியர்ச் சபையார் அலசி ஆய்ந்து திருத்தி அமைக்கத் தவறிவிட்டனரென்றுங் கண்ட மகாதேசாதிபதி அம்முரண்பாடுகளை எல்லாம் விசாரணை செய்து திருத்தி அமைத்த ஓர் அறிக்கையைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறு 31-12-56-ல் ஒரு சம்பள முரண்பாட்டுச்சபையை நியமித்தார்கள்.

சம்பள முரண்பாட்டுச் சபையார் தமக்களிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி பல சங்கங்களையும், பல இலாக்காக்களின் தலைமை அதிகாரிகளையும், கலாசாலை அதிபர்களையும் 1-1-46 க்கும் 1-4-55 க்கும் இடைப்பட்ட காலத்தில் சேவையிலிருந்த தனிநபர்களில் சிலரையும் இன்னும் பல்வேறு துவறகளிலும் ஆழ்ந்த அறிவு வாய்ந்தவர்களையும் காலித் தொகுதி அங்கத்தவர் டாக்டர் தகநாயக்காவையும் விசாரணை செய்து 1-1-46 க்கும் 1-4-55 க்கும் இடைப்பட்ட காலத்தில் சேவையில் இருந்த ஒரு சில உத்தியோகத்தர்களதும் ஆசிரியர்களதும் சம்பளத்திலும் சம்பள விகிதங்களிலும் தாம் கண்ட முரண்பாடுகளை அலசி ஆராய்ந்து திருத்தி அமைத்து அவற்றை இரு நிர்வாககால அறிக்கைகளாக்கி உத்தியோகத்தர்களுக்குரியதை 1957-ம் ஆண்டின் 27-ம் இலக்க நிர்வாக கால அறிக்கையாகவும் ஆசிரியர்களுக்குரியதை 1958ம் ஆண்டின் 2-ம் இலக்க நிர்வாக கால அறிக்கையாகவும் வெளிப்படுத்தினர்.

சம்பள முரண்பாட்டுச்சபையாரின் அறிக்கையென்பது 1-4-55-ல் ஓர் ஊழியனுக்குப் போலியர்ச் சபையாரின் சம்பளத் திட்டப்படி வழங்கப்பட்ட சம்பளம் போதியதன்று என்று கண்டு அதைத் திருத்தியமைத்த ஒரு சம்பளம். எனவே குறித்த ஊழியனுக்கு குறித்த திகதியில் கொடுக்கப்பட்ட சம்பளத்தைக் கழித்து அதிகப்படியான வேதனத்தை அம்மாசத்துக்கு வழங்கல். ஆகையால் இச்சம்பளத் திட்டமும் போலியர்ச்சபையாரின் சம்பளத் திட்டமும் ஒன்று என்பதும், ஒரே முறையாலும் ஒரே திகதியிலும் அமுல்செய்யப்படவேண்டும் என்பதும் விளங்கக்கிடக்கின்றன.

மகாதேசாதிபதியின் நிபந்தனைகளையும் சம்பள முரண்பாட்டுச் சபையாரின் சம்பள அறிக்கையின் தன்மைகளையும் கணித்து அறியாத திறைசேரி குறித்த சம்பளத் திட்டம் எல்லாருக்கும்பொதுவான ஒரு புதிய சம்பளத் திட்டமென நினைத்து அதனை 1-10-57-ல் நடைமுறைக்குக் கொண்டு வரத்தீர்மானித்து தனது தீர்மானத்தை 443-ம் இலக்க திறைசேரியின் சுற்று நிருபத்தால் 19-4-58-ல் வெளிப்படுத்தியது. பின் தனது தீர்மானத்தின்படி பழைய சம்பளத்திட்டத்தை அதாவது 1-4-55 க்கு முன்னிருந்த சம்பளத்தை புதிய சம்பளத்திட்டத்துக்கமைய மாற்றியமைக்க முடியாதெனக்கண்டு தனது தீர்மானத்தை 467-ம் இலக்கச் சுற்று நிருபத்தால் சிறிதளவு மாற்றி 22-11-58-ல் வெளிப்படுத்தியது. இச்சுற்று நிருபத்தின்படி போலியர்க் கொமிஷன் சம்பளத்திட்டத்துக்கு முன்பதாகவிருந்த சம்பள விகிதங்கள் - அதாது 1-4-55க்கு முன்பதாகவிருந்த சம்பள விகிதங்கள், 1-4-55 அன்று சம்பள முரண்பாட்டுச் சபையின் சிபாரிசுக்கமைய மாற்றியமைக்கப்பட்டன. ஆனால் 1-4-55-ல் சேவையிலிருந்த ஆசிரியர்களுக்கு அத்திகதியிலிருந்து, அதனாலேற்பட்ட அதிகப்படியான சம்பளம் வழங்கப்பட்டிலது. விசாரணை செய்தபோது சம்பள முரண்பாட்டுச் சம்பளத் திட்டம் ஒரு புதிய திட்டமென்றும் அது 1-10-57-ல் அமுல் செய்யப்பட்டிருக்கிறது என்றும் திறைசேரி கூறுகிறது. இதுதிறைசேரியின் பெரும்பிழையான கூற்றும் செயலும் என்பதும் வெள்ளிடைமலையாய் விளங்காநிற்கின்றது. நிபந்தனைகளையும் சம்பள முரண்பாட்டுச் சபையார் அறிக்கையையும், வாசித்தவர்களுக்கு இவ்விடயம் நன்கு புரியும்.

திறைசேரி குறித்த சம்பளத் திட்டத்தை முறைகேடான முறையிலும், பிழையான திகதியிலும் அமுல் செய்து நடைமுறைக்குக் கொண்டு வந்ததைக் காலி அங்கத்தவர் டாக்டர் தகநாயக்கா 8-2-61ல் கூடிய பாராளுமன்றத்திற் கண்டித்து அந்நேரத்தில் அங்கு சமூகமளித்திருந்த நிதி மந்திரியை நோக்கி குறித்த சம்பளத்திட்டத்தை அமுல் செய்த பிழையான திகதியாகிய 1-10-57 ஐ 1-4-55 ஆக மாற்றியமைக்கும்படி கோரிய கோரிக்கைக்குத் திறைசேரி இன்னும் செவிமடுத்திலது.

அடுத்த புதிய சம்பளத்திட்டத்தை திறைசேரி நடைமுறைக்குக் கொண்டு வருமுன் பிழையைத் திறைசேரி திருத்தக்கடமைப் பட்டிருக்கின்றது. அன்றேல் குறித்த உத்தியோகத்தர்களுக்கு புதிய திட்டத்திலும் (வில்மற் பெரேராவின் சம்பளத் திட்டம்) நஷ்டம் ஏற்படும். எப்படியெனில் புதிய சம்பளத் திட்டத்தின்சம்பளத்துக்கும் சம்பள விகிதங்களுக்கும் அமைவாகப் பழைய சம்பளத்தையும் சம்பள விகிதங்களையும் மாற்றியமைக்கும்போது பழைய இருசம்பளவிகிதங்களை அதாவது 1-4-55லும், 1-10-57லும் இருந்த சம்பள விகிதங்களை மாற்றியமைக்க வேண்டியபடியால் நட்டத்தை அனுபவித்த குறித்த உத்தியோகத்தர்களுக்கு மூன்று அல்லது இரண்டு உயர்ச்சிச் சம்பளப் படிகள் குறைத்துக்கணிக்கப்படும். இக்குறைவினால் தாக்கப்பட்டவர்கள் சீவியகாலமும் பின் அவர்களின் பென்சன் காலத்திலும் தொடர்பாய் நட்டத்தை வருவிக்கும்.

எனவே புதியதிட்டம் நடைமுறைக்குக் கொண்டுவருமுன் இச்சம்பளத்திட்டத்தால் பாதிக்கப்பட்ட, பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத சுயபாஷா ஆசிரியர்களும், பயிற்றப்படாத ஆங்கில ஆசிரியர்களும் தங்கள் தங்கள் சங்கங்கள் மூலமாகவோ அல்லது தனிப்பட்ட முறையாகவோ நம்புதிய நிதி மந்திரியாரைச் சந்தித்து திறைசேரி பிழையாய் நடந்த முறையை எடுத்துக்காட்டி பிழையைத் திருத்துவிப்பதுமன்றி திறைசேரியின் சுற்றுநிருபங்கள் இரண்டினையும் உடனடியாக வாபஸ் பெறும்படியும் வேண்டிக்கொள்ளவேண்டும்.

என்.வி. வீரகத்திப்பிள்ளை

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிராமங்களில் நிறுவப்படும் நூல்நிலையங்கள் எதிர்காலத்தில் பிள்ளைகள் கல்வித்துறையில் முன்னேறுவதற்கு உதவியாக இருக்குமென்று மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. கே. சிவகுரு ஏழாலை மேற்கில் புதிதாக நிறுவப்பட்ட பொன். கந்தையா சனசமூகநிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. கே. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் திரு. சி. அருச்சுனன் பேசுகையில், கல்வி கலாச்சாரத்துறைகளிலும், உலக அறிவைப் பெறுவதற்கும் வாசிகசாலைகள் உதவும் என்று கூறினார்.

திருவாளர்கள் திரு. கே. கதிரமலைநாதன், கே. அசுறுசிங்கம், என். பாலசிங்கம், எஸ். சின்னத்தம்பி ஆகியோரும் விழாவில் பேசினர்.

## "உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளியுங்கள்"

யாழ்ப்பாணம், திங்கள்

"உள்ளூர் உற்பத்திக்கு அதிக ஊக்கம் கொடுப்பதால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தீருவதுடன், நாட்டின் முன்னேற்றத்துக்கும் வழிபிறக்கிறது" என்று இணுவில் ஸ்ரீ சிவகாமி கைத்தறி நெசவுநிலையத் திறப்புவிழாவுக்குத் தலைமைவகித்த யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் பேசுகையில் தெரிவித்தார்.

புதிய நிலையத்தை உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் திறந்துவைத்தார். திரு. சிவஞானம் தொடர்ந்து பேசுகையில், நிலையத்தின் உரிமையாளர் பிரபல வியாபாரியாக இருந்தும் உள்ளூர் உற்பத்திக்கு அதிக ஊக்கம் செலுத்துவது பாராட்டக்கூடியதென்றும், இந்த வகையான முயற்சிகளில் ஈடுபடப் பலரும் முன்வரவேண்டுமென்றும் கூறினார்.

திரு. வி. தர்மலிங்கம் எம். பி. பேசுகையில், ஒவ்வொருவரும் தனக்குத் தேவையான துணிகளைத் தாமாகவே தயாரித்து உபயோகிக்கக்கூடிய நிலைமைக்கு நமது சமுதாயம் வளரவேண்டுமென்றும் கூறினார்.

யாழ். மேயர் திரு. மகாதேவா பேசுகையில், நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் இப்படியான நிலையங்கள் திறக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைத் தமிழர் பௌத்த சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா புதன் கிழமை காலை, யாழ்ப்பாணம் ஸ்ரீநாகவிகாரையில் நடைபெறும். இந்த விழாவுக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா தலைமைவகிப்பார். திரு. பி. டி. எஸ். குலரத்ன எம். பி., பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

பல எம்.பி.க்களும், பௌத்த உயர்தர அதிகாரிகளும் இவ்விழாவில் கலந்துகொள்வார்கள்.

## இரத்த வங்கி முற்றுகை

கொழும்பு, ஞாயிறு

ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்தம் வேண்டுமென்று விடப்பட்ட வேண்டுகோளின்பேரில் நேற்றுப் பலதரப்பட்ட வகுப்பினர்களும் இரத்தவங்கியை வந்து முற்றுகையிட்டிருந்தனர். இராணுவம், ஆகாயப்படை, பொலிஸ், அரசாங்க இலாகா முதலிய இடங்களிலுமிருந்தும் பெருந்திரளானவர்கள் இரத்தம் கொடுப்பதற்காகச் சென்றிருந்தனர். சில ஸ்தாபனங்கள் தங்கள் சிப்பந்திகள் இரத்ததானம் செய்வதற்காக அலுவலகங்களை காலை 10 மணிக்கு மூடினர்.

## பதவி உயர்வா?

### என். எம். விளக்கம்

கொழும்பு, ஞாயிறு

"வருங்காலத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களும் பதவி உயர்வு அவர்களின் திறமை, தகைமை, சாதுரியம் முதலியவைகளிலேயே தங்கியிருக்கும்" என்று டாக்டர் என். எம். பெரேரா குவாஸி விகிதர் சங்கக் கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

---

யாழ்ப்பாணம், ஞாயிறு

நவராத்திரி விழாவை யொட்டி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற விசேட கலைவிழாவில் "மார்க்கண்டேயர்", "சோக்கிரட்டீஸ்" முதலிய நாடகங்களும், நடனவிருந்தும் இடம்பெற்றன. விசேட பூசையின் பின்னர் அன்னதானம்வழங்கப்பட்டது.

# உலகின் கவனத்தை ஈர்க்கும் மற்றுமொரு தேர்தல்

## அமெரிக்க ஜனாதிபதி போட்டி நவம்பர் 3-ல் நடைபெறும்

வாஷிங்டன், அக். 18

உலகின் கவனத்தை ஈர்க்கும் மற்றுமொரு தேர்தல் அடுத்த மாதத்தில் நடைபெறவிருக்கின்றது. பிரிட்டிஷ் பொதுத் தேர்தலின் முடிவுகளை அறிவதில் ஆவல்கொண்ட மக்களின் பார்வை இப்பொழுது அமெரிக்க ஜனாதிபதி, உப ஜனாதிபதித் தேர்தல் பக்கம் திரும்பியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி உப ஜனாதிபதித் தேர்தல்கள் அடுத்த மாதம் மூன்றாந் திகதி நடைபெறுகின்றது. அதேசமயத்தில் 50 மாகாணங்களில் மொத்தம் 34-ல் செனட்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும் வாக்குப்பதிவு நடைபெறும்.

செனட்சபையில் மொத்தமுள்ள 100 இடங்களில் 35 இடங்களுக்குத் தேர்தல் நடைபெறும். டெல்வானி மாகாணத்தில் மட்டும் இருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### ரசமான போட்டி

இந்த வருஷம் செனட்சபைக்கு நடைபெறும் மிகவும் ரசமான போட்டிகளில் ஒன்று நியூயோர்க் மாகாணத்தில் இடம்பெறுகின்றது. செனட்டர் கென்னத் பி. கீட்டிங் (குடியரசு) இரண்டாவது தடவையாக இங்கு தேர்தலுக்கு நிற்கிறார். இவரை எதிர்த்து, முன்னாள் அமெரிக்க அட்டோர்னி ஜெனரலும், கொலை செய்யப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் சகோதரருமான ரொபர்ட் கென்னடி (ஜனநாயகக் கட்சி) போட்டியிடுகிறார். ரொபர்ட் கென்னடியின் தம்பி, செனட்டர் எட்வேர்ட் கென்னடி மீண்டும் மாஸச்சூஸட்ஸ் மாகாணத்தில் தேர்தலுக்கு நிற்கிறார். அண்மையில் விமானவிபத்தில் காயமடைந்த அவர் இன்னமும் ஆஸ்பத்திரியிலேயே இருக்கிறார். ஆனால் அவரது மனைவி அவர் சார்பில் தேர்தல் பிரசாரம் செய்துவருகின்றார்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜோர்ஜ் மாஃபி முன்பு திரைப்படங்களில் நடித்துவந்தவர் இப்பொழுது நடிப்புத் தொழிலினின்றும் விலகி, கலிபோர்னியாவில் வியாபாரம் செய்கிறார். செனட்சபைக்கு இரு பெண்களும் போட்டியிடுகின்றனர்.

சீன அணுகுண்டு வெடிப்பு:

# ஆசிய, ஐரோப்பிய நாடுகள் காரசாரமான கண்டனம்

## அணுகுண்டை சீனு ஆக்கிரமிப்புக்கு பயன் படுத்தலாமென சவான் கருத்து

### "உலகை சீனு ஏமாற்றி விட்டது" — பிரிட்டன்

லண்டன், அக். 18

அணுகுண்டொன்றை கம்யூனிஸ்ட் சீனவெடித்ததை பல ஆசிய, ஐரோப்பிய நாடுகள் காரசாரமாகக் கண்டித்துள்ளன.

இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி இது பற்றித் தெரிவிக்கையில், கெய்ரோவில் நடைபெற்ற மண்டல சார்பற்ற மகாநாட்டில் தாம் தெரிவித்த அச்சம் இப்பொழுது சரியாகிவிட்டதென்றும் சமாதானத்துக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கிறதென்றும் கூறினார்.

பம்பாயில் இந்திய பாதுகாப்பு மந்திரி சவான் தெரிவிக்கையில் அணுகுண்டை சீனு ஆக்கிரமிப்புகளுக்கு மட்டுமின்றி அரசியல் காரணங்களுக்காகவும் பயன்படுத்லாம் என்றும் அச்சம் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் அரசாங்கம் இது சம்பந்தமாக வெளியிட்ட குறிப்பொன்றில்; சீனுவின் அணுகுண்டு வெடித்ததன் மூலம் அமைதியை விரும்பும் உலக மக்கள் பெரும் ஏமாற்றத்துக்குள்ளாகி விட்டார்கள் என்றும் சீனுவின் அணுகுண்டு வெடிப்பு ஆசியாவின் இராணுவ நிலைமையை மாற்றுது என்றும் தெரிவித்துள்ளது.

அணுகுண்டை சீனு வெடித்ததன் மூலம், கெய்ரோவில் நடைபெற்ற மண்டல சார்பற்ற மகாநாட்டை உதாசீனம் செய்து விட்டதென்று யுகோஸ்லேவியா தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக யுகோஸ்லேவியாவிலிருந்து வெளியாகும் பிரபல பத்திரிகை, "சமாதான மூலம் தகராறுகளைத் தீர்ப்பதில் சீனுவுக்கு சிறிதளவும் நோக்கம் கிடையாது" என்று குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு ஜெர்மனியும் சீனுவின் இந்த முயற்சியைக் கண்டித்துள்ளது.

லண்டனிலுள்ள சீன ஸ்தானிகர் காரியாலயத்துக்கு முன்னர், நேற்று இரண்டு மணி நேரம் வரை ஆர்பாட்டம் நடைபெற்றது.

## சீன அணுகுண்டின் விளைவுகள்

டோக்கியோ, அக். 18

கம்யூனிஸ்ட் சீனு வெடித்த அணுகுண்டின் விளைவாக கதிரியக்கங்கள் ஜப்பானின் ஒரு பகுதியை தாக்கும் என்று டோக்கியோ அணுசக்தி நிலயம் அறிவித்திருக்கிறது. காற்று, திசைமாறினால் இக் கதிரியக்கங்கள் இந்தியா, சோவியத் யூனியன், பாகிஸ்தான் ஆகிய நாடுகளையும் பாதிக்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## ஆங்கிலம் நீடிப்பு

சென்னை, அக். 17

1965-ம் ஆண்டு ஜனவரி 26-ம் திகதிக்குப் பின்னரும் தமிழ்நாடு சட்டசபையின் அலுவல்களை ஆங்கிலத்தில் நடத்த வழிவகைசெய்யும் மசோதா நேற்று சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. தி. மு. கழகத்தினர் வாக்களிக்காது நடுநிலைமை வகித்தனர்.

## டி. டி. கே. ராஜினமா?

ராவல்பிண்டி, அக். 18

இந்தியாவின் நான்காவது திட்டம் சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு தகராறு குறித்து இந்திய நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி பதவியிலிருந்து விலகப்போவதாகக் கூறியுள்ளாரென்று பாகிஸ்தான் ரவடுனி இன்று அறிவித்துள்ளது.

## ரஷ்ய-இந்திய உறவுகள்

புதுடில்லி, அக். 18

ரஷ்யாவில் ஏற்பட்ட மாறுதல்களினால் புதுவித மாற்றங்கள் எதுவும் நிகழாது என்றும் இந்தியாவுக்கும் சோவியத்யூனியனுக்குமிடையே நெருங்கிய உறவுகள் தொடர்ந்திருந்துவரும் என்றும் இந்தியாவிலுள்ள சோவியத் தூதரக பொறுப்பதிகாரி நேற்று பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

லெனின் கொள்கைகளை சோவியத்யூனியன் தொடர்ந்து பற்றிநிற்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வியப்போட்ல்ட்விலி, அக். 18

காங்கோவிலிருந்து ஐக்கிய அரபு குடியரசு, அல்ஜீரியா வெளியேற வேண்டுமென்று காங்கோ பிரதமர் திரு. ஷோம்பே அறிவித்துள்ளார்.

## ரஷ்யத் தலைவர்களுக்கு சீனு வாழ்த்து

பீக்கிங், அக். 18

சோவியத் யூனியனின் புதிய பிரதமர் திரு. அலெக்ஸிகொஸிஜின், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதம காரியதரிசி திரு. பிரஸ்னேவ் ஆகியோருக்கு சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய், திரு. மா-ஸே-துங் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர். சீன-ரஷ்ய உறவு விருத்தியுற வேண்டுமென அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சில செய்திகள் கூறுகின்றன.

பக்ஷி குலாம் விவகாரம்:

# விசாரணைக் கமிஷன் நிறுவப்படும்

## "குற்றச்சாட்டுகள் முழுக்க லஞ்ச ஊழல் சம்பந்தப்பட்டதே" — சாதிக்

புதுடில்லி, அக். 18

தற்பொழுது தடுப்புக்காவலிலிருக்கும் முன்னாள் காஷ்மீர் பிரதமர் திரு. பக்ஷி குலாம் மீது சுமத்தப்பட்ட குற்சட்டுக்களை விசாரிக்க இரண்டு மாத காலத்துக்குள் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படுமென்று காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் தெரிவித்துள்ளார்.

திரு. சாதிக் நேற்று இங்கு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்தவொரு பேட்டியில் தான் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பக்ஷி குலாம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் லஞ்ச ஊழல் சம்பந்தமானவைதான் என்றும் திரு. சாதிக் தெரிவித்தார்.

இரண்டுமாத காலத்துக்குள் நியமிக்கப்படவிருக்கும் விசாரணைக் கமிஷனுக்கு ஹைகோர்ட் நீதிபதியோ அல்லது சுப்ரீம் கோர்ட் நீதிபதியோ தேர்ந்தெடுக்கப்பட்டால் அதைத் தாம் வரவேற்பதாகவும் திரு. சாதிக் தெரிவித்தார்.

திரு. பக்ஷி குலாம் முகம்மது விரைவில் விடுதலை செய்யப்படுவார் என்று திரு. சாதிக் வலியுறுத்திக் கூறினார்.

# 23 பேர் கொண்ட பிரிட்டிஷ் மந்திரிசபை

## புதிய இலாகாவும் இடம் பெற்றுள்ளது

லண்டன், அக். 18

புதிய பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன், 23 அங்கத்தவர்களைக் கொண்ட மந்திரிசபையொன்றை அமைத்துள்ளார். தேர்தலில் தோல்வியுற்றசிலர், மந்திரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய இலாகா ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

கடந்த 15-ம் திகதி நடைபெற்றபிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் கட்சிகளின் இறுதி நிலைமை: தொழிற்கட்சி: 317, கன்ஸர்வேட்டிவ்: 304, லிபரல் கட்சி: 09. சுயேச்சையாளர்களோ அல்லது கம்யூனிஸ்டுகளோ இத்தேர்தலில் வெற்றி பெறவில்லை.

திரு. வில்ஸனின் மந்திரி சபையில் ஒரு பெண்ணும் இடம்பெற்றுள்ளார்.

பிரதமர் பதவியை பொறுப்பேற்றபின்னர் திரு. வில்ஸன் விடுத்த முதற்செய்தியில், சொற்ப அதிகப்படியான தொகுதிகளால் தொழிற்கட்சி வெற்றிபெற்றிருந்த பொழுதிலும் போதிய திறமையும் தகுதியும் தங்களிடம் இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்,

## சமாதான அறையில் வெள்ளம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறை நீதிமன்ற சமாதான அறை சென்ற வெள்ளிக்கிழமை வெள்ளக்காடாக இருந்தது. மழைநீர் கூரையால் அறையினுள் செல்வதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நீதிபதி தமது கடைமைகளை அங்கு இருந்து செய்வதற்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டது. கூரை உடனடியாகத்திருத்தம் செய்யப்படாது விட்டால் நீதிமன்றம் முழுவதுமே வெள்ளத்தால் பாதிக்கப்படும் என அஞ்சப்படுகிறது.

## இணுவிலில் ஐ. நா. தின விழா

சுழிபுரம், ஞாயிறு

இம்மாத பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் தினவிழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை யாழ்ப்பாண ஐ. நா. கிளை செய்து வருகின்றது. மானிப்பாயில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள இணுவில் கிராமத்தில் இவ்விழாவை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது,

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

வட்லியடைப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. அ. வீரசிங்கம், உபதலைவர்: திரு. அ. க. துரையப்பா, காரியதரிசி: க. சி. இரத்தினம்.

## ஒரே நாளில் 300 பேர் பலி!

சைகோன், அக். 18

தென்வியட்நாமின் தலைநகரான சைகோனிலிருந்து வடக்கே சுமார் 30 மைல்தூரத்தில் நேற்று 300 வியட்காங் துருப்புகள் கொல்லப்பட்டதாக சைகோனிலிருந்து வெளியாகும் செய்தி யொன்று அறிவித்துள்ளது.

அரசாங்கதுருப்புகளுக்கும் வியட்காங் துருப்புகளுக்குமிடையே ஏற்பட்ட கடும் சண்டையில் இவர்கள் மாண்டதாக அறிவிக்கப்பட்டது. அரசாங்க துருப்புகளில் 14 பேர் மாண்டனர் என்றும் 23 பேரைக் காணவில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒலிம்பிக் விழாவில் அமெரிக்கா முன்னணி

## மழைகாரணமாகபோட்டி தடைப்படுகிறது

டோக்கியோ, அக். 18

டோக்கியோ ஒலிம்பிக் விழாவில் நேற்றுவரை மொத்தம் 18 நாடுகளுக்கு 68 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவுக்கு 23 தங்கப் பதக்கங்களும் சோவியத் யூனியனுக்கு 11 பதக்கங்களும், ஹங்கேரி, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகியவற்றுக்கு தலா 4 தங்கப்பதக்கங்களும் கிடைத்திருக்கின்றன. மீதமாகவுள்ள 22 தங்கப்பதக்கங்களை 13 நாடுகள் பகிர்ந்தெடுக்கின்றன.

டோக்கியோவில் இன்று காலை மழை பெய்ததால், விளையாட்டுக்கள் சிறிது நேரம் தடைப்பட்டது. மழை தொடர்ந்து பெய்யுமானால் போட்டிகளை கணக்கெடுப்பதில் கஷ்டம் ஏற்படலாம் என்றுகூறப்படுகிறது. இன்று நடைபெற்ற நீச்சல் பேட்டியில் அமெரிக்க பெண்மணி புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஆஸ்திரேலியா வீரர் இன்று வெற்றி பெற்றுள்ளார்.

## விஞ்ஞானிகளுக்கு சீனு பாராட்டு

பீக்கிங், அக். 18

சீனுவின் முதல் அணுகுண்டு பரீட்சை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளதென்று பீக்கிங் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதில் சம்பந்தப்பட்ட சகல விஞ்ஞானிகளுக்கும் தொழில் நுட்ப நிபுணர்களுக்கும் சீனத் தலைவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

சீன அணுகுண்டு வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது குறித்து சில நாடுகள் வாழ்த்துக்கள் அனுப்பியிருப்பதாக பீக்கிங் செய்தியொன்று கூறுகிறது.

## அயூப்கான்

கராச்சி, அக். 18

ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் நடத்தும் பொருட்டு பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் இன்று மேற்கு பாகிஸ்தான் வந்து சேர்ந்தார்.

## அரிசி திருட்டு வழக்கு

### எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், ஞாயிறு யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்தவர்களான சிங்கராசா புஷ்பராசா, பஸனிருபசிங்கம், ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்களான மாரிமுத்து சுந்தரலிங்கம், வேலன் கந்தசாமி ஆகிய நால்வரும் பர்மாவிலிருந்து காங்கேசன்துறைக்கு "எஸ். எஸ். கொன்பிடன்ஸ்" என்ற கப்பலில் கொண்டுவரப்பட்ட அரிசியில் ரூ 72-50 பெறுமதியான அரிசியை சென்ற ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி காங்கேசன்துறை சுங்கக் கிட்டங்கியிலிருந்து திருடியதாக காங்கேசன்துறை பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு ஜி. எவ்.எச். அத்துறுபாரு முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிகள் தரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர். இன்ஸ்பெக்டர் திரு. ஏ. அரசரட்னம் வழக்கை நடத்தினர்.

பலாலி ராணுவமுகாமைச் சேர்ந்த கோப்ரல் எஸ். ஏ. சில்வா, உணவுப் பகுதி தடுப்பு அதிகாரி எஸ், சண்முகரட்ணம், உணவுப்பகுதிகாவலாளி ஏ. கந்தையா ஆகியோர் சாட்சியமளித்தனர். பொலிஸ் தரப்பு சாட்சியங்கள், சம்பவ நேரம் அரிசி யாரின் பொறுப்பிலிருந்ததென்பதை நிரூபிக்காமையால் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

## பத்திரிகை காகித இறக்குமதி

கொழும்பு, ஞாயிறு பத்திரிகைகள் அச்சடிப்பதற்கு உபயோகப்படுத்தப்படும் காகித இறக்குமதியை (நியூஸ்பிறின்ட்) அரசாங்கம் அடுத்த ஆண்டில் பொறுப்பேற்குமென்று தொழில் மந்திரி திரு மைத்திரிபால சேனநாயக்கா இன்று பார்லிமெண்டில் அறிவித்தார்.

கைத்தொழில் மசோதாவின் சட்டவிதிகள்பற்றிய இரண்டாவது வாசிப்பு பற்றி விவாதிக்கப்பட்டபோதுதான் அவர் மேற்கண்டவாறு கூறினர்.

வாழைச்சேனை காகிதஉற்பத்திக் கார்ப்பரேஷன் வேறு உபயோகங்களுக்குத் தேவையான கூடியளவு காகிதங்களை உற்பத்தியாக்கும் என்றும் கூறினர்.

## ஜீவனும்ச வழக்கில் தீர்ப்பு

ஊர்காவற்றுறை, ஞாயிறு நாரந்தனையைச் சேர்ந்த கனகையா பெண் இரத்தினம் என்பவர் தனக்கும், தன் பிள்ளைகள் எழுவருக்கும் பராமரிப்புப்பணம் கோரி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு இன்று நீதிபதி திரு. நி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது வழக்காளி சார்பில் புரக்டர் பி. கதிரவேலு ஆஜரானர். டாக்ஸி சாரதியான தனது கணவர் தன்னையும் ஏழு பிள்ளைகளையும் தவிக்க விட்டு யாழ்ப்பாணத்தில் ஆசைநாயகியாக ஒருவரை வைத்திருப்பதாக மனுதார் நீதிபதியிடம் தெரிவித்தார். விசாரணையின் பின் நீதிபதி மனுதாருக்கும், ஏழு பிள்ளைகளுக்கும் ரூபா 75 பராமரிப்புப் பணமாகக் கட்டவேண்டும் எனத்தீர்ப்பளித்தார்.

# தூய உள்ளத்திலிருந்தே இலக்கியம் எழவேண்டும்

## பாரதிவிழாவில் வித்துவான் வேந்தனர்

### "தமிழர் விடுதலைபெற ஈழத்தில் ஒரு பாரதிதோன்ற வேண்டும்"

— உடுவில் எம். பி:

யாழ்ப்பாணம், ஞாயிறு "இலக்கியம் தூய உள்ளத்தினின்று தோன்றவேண்டும். இலக்கிய விளைநிலமாகிய நெஞ்சப் புலன் தூயதாக இல்லாவிட்டால் உயர்ந்த நோக்கத்துடன் இணைந்துவருகின்ற மரபுபட்ட இலக்கியங்களைப் படைக்கமுடியாது. பாரதியாரின் உள்ளம் மிகத் தூய்மையானது. மாசு மறை இல்லாதது. அவர் தெய்வபக்தியும், தேசிய உணர்ச்சியும் உள்ளவர். அவருடைய கவிதைகள் அடிமை உணர்ச்சியால் அலைப்புண்டு அல்லற்பட்ட பிறநாட்டு மக்களது உள்ளத்தில் புதிய சுதந்திர உணர்ச்சியை ஏற்படுத்தியது. அவர், மக்கள் பேசுகின்ற தூய, இனிய பழகுதமிழ்ச் சொற்களால் பாமர மக்களுக்குப் புரியக்கூடிய விதத்தில் இலக்கியம் படைத்தார்."

இவ்வாறு சுன்னுகம் நாவலர் மன்ற ஆதரவில் சுன்னுகம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற பாரதிவிழாவில் 'பாரதியும் இலக்கியமும்' என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்திய வித்துவான் க. வேந்தனர் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. ஆ. தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வித்துவான் வேந்தனர் தொடர்ந்து கூறியதாவது:

"நாம் இருக்கும் நாடு நமது என்று உணர்ந்தோம்; அது நமக்கே உரியது என்பதை உணர்ந்தோம்; பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்; பரிபூரணருக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்ற கவிதையில் இடம்பெற்றுள்ள சொற்களெல்லாம், தூய, இனிய பழகுதமிழ்ச் சொற்களேயாகும். அகராதி பார்த்து அறியவேண்டிய சொற்களெல்லாம் அதிலில்லை. இங்ஙனம் அவர் பாடிய ஒவ்வொரு கவிதைகளும் இனிய பழகு தமிழ்ச் சொற்களால் ஆண்மை, அன்பு, அறிவு, மானம் என்பவற்றை எழுப்பத்தக்கதாக இருக்கின்றன. பாரதி பாடிய கவிதைப் பொருள் அவர் வாழ்ந்து கண்டனவாகும். யாரிடமாவது கேட்டு, அளவுக்குச் சட்டை தைப்பது போலக் கவிதை பாடுபவன் அல்லன் பாரதி. உள்ளத்தில் ஊறி எழுகின்ற உணர்ச்சிப் பெருக்கால் கவிதை என்ற அமுத வெள்ளத்தை அள்ளிப் பாயவிடுகின்ற அமுதசுரபி போன்றவன் பாரதி.

பாரதியின் கவிதைகளில் எல்லாம் ஊடுருவி முதன்மைபெற்று நிற்பது அன்பு. அன்போடும் அருளோரும் இணைந்துநிற்கிறபடியால்தான் பாரதியின் கவிதைகள் உள்ளத்தைக் கவர்கின்றன"

ஆசிரியர் திரு. வி. பொன்னம்பலம் 'பாரதிகண்ட சமுதாயம்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் கூறியதாவது:-

### பாரதிகண்ட சமுதாயம்

"பாரதி புதுயுகக் கவிஞன். நமது மக்கள் தொழில், விவசாயம் ஆகிய துறைகளில் முன்னேறவேண்டுமென விரும்பினன். 'புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைகள் தமிழுக்கில்லலை' என்றெல்லாம் பாடினன். கொல்லர் உலைவளர்த்து, கலை வளர்ப்பான் அவசியத்தை வற்புறுத்தினன். மிகையான நீருடன் பெருகி வரும் நதிகளைத் தடுத்துத் தேக்கியமைத்து நாடுகளில் பயிர் செய்வதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

வெள்ளை நிறத்தொரு பூனையின் கதையைச் சொல்லி ஒரு தாயின் வயிறில் பிறந்த குட்டிகள், நிறத்தில் மாறுபட்டாலும் சகோதரர்கள் இல்லையா என்று மிருகத்தைக் காட்டி மனித விலங்குகளுக்குப் புத்தி கற்பிக்க முற்படுகிறான் பாரதி. இது இன்றைய உலகில் நிறத்திமிர்போன்ற கொடுமைகளுக்கு நல்ல பாடமா விளங்குகின்றது. வயிற்றுக்குச் சோறு இடல்வேண்டும். இங்கு வாழும் மனிதர்களுக்கு எல்லாம் பயிற்று பல தொழில்செய்து இந்தப் பாரை உயர்த்துவதன் அவசியத்தைத் தெளிவுபடுத்துகிறான்.

உடுவில் பாராளுமன்றப் பிரதிநிதி பேசுகையில், பாரதிக்குவிழா எடுப்பதுடன் நாம் அவருக்குச் செய்யக்கூடிய சேவைகள் முற்றுப்பெற்றுவிடுகின்றது என்று எண்ணிவிடக்கூடாது என்றும் அவரது கனவுகளை நனவாக்குவதற்காக அல்லும் பகலும் உழைக்கவேண்டுமென்றும் கூறினர்.

இந்த நாட்டிலே அடிமைகளாய், கோழைகளாய், பயந்தவர்களாய், வாழவக்கற்றவர்களாய் முடங்கிக் கிடக்கும் தமிழ்பேசும் மக்களைத் தட்டி எழுப்பி, சுதந்திர உணர்ச்சியைப் பாய்ச்சுவதற்கு ஈழத்திலே பாரதிபோன்ற கவிஞன் ஒருவன் தோன்ற வேண்டும் என்றும் அவர் கூறினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
6-30 காட்சி மாத்திரம்
சம்பூர்ண
மகாபாரதம்
இரவு 9-30 மாத்திரம்
பியா மிலன் கி யாஸ்
(ஹிந்தி)
PIYA MILAN KI AAS


REGAL — JAFFNA
NOW SHOWING
Hayley Mills
in
WHISTLE DOWN THE WIND

மங்களகரமான 4வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
குயின்லன் (துல்கொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)
வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ நிருஷ்ண (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்

இந்தப் பாடு அனாவசியம்!



2 அங்குல அளவு துளையுள்ள 100 அடி சுருளின் பாரம் 53 ராத்தல் தான். இவ்வளவு கனக்குறைவானது அல்கத்தீன் பைப். 2" துளையில் 200 அடி சுருள்களிலும் மற்றெல்லாத் துளைகளில் 500 அடி சுருள்களில் கிடைக்கும்.

பாரமற்றது, வளையுந் தன்மையுடையது, அரிப்பை எதிர்க்க வல்லது.

'அல்கத்தீன்' பைப்
பி. எஸ். 1972: 1961

இலங்கையில் அல்கத்தின் பைப் உற்பத்தி செய்பவர்:
CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்.
த. பெ. 352, கொழும்பு.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 19-10-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல் — ஆர். மூர்த்திஐயர், 7-15 பாட்டு — கே. கே. கிருஷ்ணபிள்ளை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 எங்கள் விருப்பம், 9-30 தமிழ் மூலம் சிங்களம், 10-00 நேயர் விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை. 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 பாட்டு — ஆர். மீனாக்ஷி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பாட்டு — ஆர். மீனாக்ஷி, 1-30 வாத்திய இசை, 1-50 கதம்பம், 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு, 2-40 பொன்னொளிர்பாரதம் — தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 திரைப்படஇசை, 5-45 இசைப்பயிற்சி,

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 8-00 இசைக் கோவை, 8-30 வெற்றி வாகை — சித்திரம், 8-45 மெல்லிசை, 9-15 சுபந்த சங்கீதம், 9-30 பாட்டு — எம். கே. கோவிந்தராஜ பாகவதர்.

## ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் உயிரியல் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. க. குணரத்தினம் பதவி உயர்வுடன், புதிய பாடத்திட்டத்திற்கேற்ப விஞ்ஞான நூல்களை எழுதி வெளியிடும் பொருட்டு கொழும்பு வித்தியா கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையொட்டி மேற்படி கல்லூரி ஆசிரியர்களால் இவருக்கோர் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

## தூய உள்ளத்தி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வி ராதா சோமசுந்தரம் 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில், "எளிய நடையில் இனிய தமிழில், பாமரமக்களுக்குப் புரியக் கூடிய முறையில் கவிதைகள் எழுதிய 20-ம் நூற்றாண்டுக் கவிஞன் பாரதி" என்றார்.

திரு. இ. திருநாவுக்கரசு 'பாரதியும் மேலைத்தேசமும்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில், "பாரதி பாரத நாட்டுப் புலவன் மட்டுமல்ல; உலகக் கவியாய் கவிவான மண்டலத்தில் விண்மீனாக ஞானக்கதிர்விட்டு மிளிர்கின்றான்" என்றார்.

ஆசிரியர் திரு. க. வைரமுத்து 'வரலாற்றில் பாரதி' என்னும் பொருள்பற்றி பேசுகையில், மனிதனாக வாழவும், மனிதனாக வாழ்ந்து தேவராக வாழவும், அரசியல் சித்தாந்த அருள்வழிகாட்டி புத்தம் புதிய பாரதத்தின் சிற்பியானார் பாரதியார்" என்று கூறினார்.

செல்வன். எம். தங்கராசா, செல்வத்துரை ஆகியோரின் இன்னுசையும், சின்னராசா, செல்வத்துரை கோஷ்டியினரின் மேளக்கச்சேரியும் விழாவில் இடம் பெற்றன.

உதைபந்தாட்டம்

## ஸ்கந்தாவுக்கு முதல் போட்டியில் பெரும்வெற்றி!

சுன்னாகம். ஞாயிறு

யாழ்ப்பாணக் கல்லூரிகளின் விளையாட்டுச் சங்க ஆதரவில் (முதலாம் பிரிவு) சுன்னாகம் ஸ்கந்தவரோதயாகக் கல்லூரிக்கும், யாழ். பரமேஸ்வராக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற விறுவிறுப்பான உதைப் பந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கோஷ்டி 4—1 கோல்களால் வெற்றிபெற்றது.

ஆட்டம் ஆரம்பமாகி ஐந்து நிமிடத்துக்குள்ளே ஸ்கந்தா கோஷ்டி ஒரு கோலைப்போட்டது. ஸ்கந்தா கோஷ்டியைச் சேர்ந்த வலது முன்னணி வீரர் காளிதாசன் வெகு அழகாக பந்தைக் கோலுனுள் போட்டார். இடைவேளைக்குப் பத்து நிமிடமிருக்கும்போது பரமேஸ்வரா முன்னணி வீரர்கள் திறமையாக விளையாடி ஒரு கோலைப்போட்டு புள்ளி நிலையைச் சரிசமம் (1—1) ஆக்கினர்.

இடைவேளைக்குப் பின் ஸ்கந்தா வீரர்கள் மிகவும் திறமையாக விளையாடினர். ஸ்கந்தா கோஷ்டி காப்டன் மணிராஜா திறமையாகவும் தந்திரமாகவும் விளையாடினார். இடைவேளைக்குப் பின் போட்டி தொடங்கி 15 நிமிடங்களுக்குப்பின் ஸ்கந்தா முன்னணி வீரர் நடராசா ஒரு கோலைப் போட்டார் இப்போது புள்ளி நிலை (2—1) ஆக இருந்தது.

பரமேஸ்வரா முன்னணி வீரர்கள் எவ்வளவோ முயன்றும் ஸ்கந்தா பின்னணி வீரர்கள் காப்டன் மணிராசா, குணராசா, செல்வராசா ஆகியோருக்கூடாகப் பந்தைச் செலுத்த முடியாமல் திண்டாடினர். ஸ்கந்தா வீரர்கள் மேலும் திறமையாக விளையாடி இன்னும் இரண்டு கோல்களைப் போட்டனர். இவ்விரு கோல்களுள் ஒன்று குணராசாவினலும், மற்றது நடராசாவினலும் போடப்பட்டன. திரு. சபாலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

யாழ்ப்பாணகல்லூரிகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் வருடாந்தஉதைப் பந்தாட்டப் போட்டிகள் வழக்கமாகப் பொலிஸ் மைதானத்தில்தான் நடைபெற்றுவந்தன. ஆனால் இந்த வருடம் பொலிஸ் மைதானத்தில் விஸ்தரிப்பு வேலைகள் நடைபெறுவதால் போட்டிகள் எல்லாம் கல்லூரி மைதானங்களிலேயே நடைபெறுகின்றன.

## சரஸ்வதி பூசை

யாழ்ப்பாணம், சனி

இணுவில் ஜோதி இளைஞர் விவசாயக்கழகத்தின் ஆதரவில் சரஸ்வதிபூசை சிறப்பாக இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கொண்டாடப்பட்டது. கழக அங்கத்தவர்கள் உட்பட பாடசாலை மாணவர்களும் கலந்து விழாவைச் சிறப்பாக நடத்தினர்கள். கழகத் தலைவர் திரு. ம. பரமநாதன் தலைமையில் சரஸ்வதிபூசையை உடுவில் கிராமசபைத்தலைவர் திரு. ச. மூத்துலிங்கம் ஆரம்பித்துவைத்துஉரையாற்றினார். கிராமசேவகர் திரு வேலும் மயிலும், திருவாளர்கள் குணநாயகம், தி. சி. சண்முகலிங்கம், பொ. கனகசபாபதி, இ. பொன்னம்பலம், நடராசா ஆகியோரும் உரைநிகழ்த்தினர்கள்.

∴ ∴ ∴

விஜயதசமி விழா வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் சைவ இளைஞர் சங்கத்தினரால் இளைஞர் சங்கத் தலைவர் செல்வன் வ. தயாபரசிவத்தின் தலைமையில் சென்ற வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. நவாலியூர் பண்டிதர் சோ. இளமுருகனார் தேவியின் மகத்துவம் என்னும் விஷயம் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றிய பின்னர் கல்லூரி அதிபர் திரு. தி. செ. சிவகுருநாதபிள்ளையவர்களால் ஏடு பாடம் ஆரம்பித்துவைக்கப் பட்டது.

கொக்குவில் திரு. த. குமாரசாமிப் புலவர் 'பராசக்தி மகத்துவம்' என்னும் பொருள் பற்றி கதாகாலட்சேபம் செய்தார். சங்க காரியதரிசியின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

∴ ∴ ∴

யாழ். வெற்றிலைக்கேணி பரமேஸ்வர வித்தியாலயத்தில் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திரு. ஈஸ்வரசர்மா உட்பட பலர் சொற்பொழிவாற்றினர்கள்.

∴ ∴ ∴

கைதடி வயோதிபர் இல்லத்தில் நிகழ்ந்த நவராத்திரி விழாவில், மருங்காபுரி கோபாலகிருஷ்ண ஐயரின் சிஷ்யையும் கைதடி வாசியுமான திருமதி மகேஸ்வரி நகுலேஸ்வரர், மிகச் சிறப்பாக வயலின் கச்சேரி செய்து வயோதிபர்களை மகிழ்வித்தார் பலரின் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

∴ ∴ ∴

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் சரஸ்வதி பூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பெற்றோரும், பிள்ளைகளும், ஆசிரியர்களும் மிகு உற்சாகத்துடன் இவ்விழாவிற் பங்குபற்றினர். அன்று இப் பாடசாலையில் புதிய மண்டபம் ஒன்றும், காரியாலயம் ஒன்றும் திறந்துவைக்கப்பட்டன.

∴ ∴ ∴

உரும்பராய் இந்துக்கல்லூரியில் நவராத்திரி தினங்களின் இறுதி மூன்று தினங்களிலும் கலைமகள் பூசை வெகு பக்தி சிரத்தையோடு கொண்டாடப்பட்டது. ஆறுவது நள் மாலை சைவப்புலவர் இ. நவரத்தினக்குருக்களால் ஸ்தாபிக்கப்பட்ட கும்பத்திற்கு நாள்தோறும் காலை, மாலை நேரங்களில் கல்லூரி மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து செய்த அம்பாளின் விசேட பூசைகளில் பங்குபற்றினர். நாள்தோறும் திருவாளர்கள் மு. வைரமுத்து, இ. திருநாவுக்கரசுஆகியோர்சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பக்திப்பாடல்கள், இன்னிசைக் கச்சேரிகள் நாட்டிய நாடகங்கள் ஆகியனவும் இடம்பெற்றன.

∴ ∴ ∴

சுழிபுரம் குடியிருப்பு, நாவலர் சனசமூக நிலையம் இம்முறை சரஸ்வதி பூசையை சிறப்பாகக் கொண்டாடியது. பிரம்மஸ்ரீ க. சண்முகரத்தின சர்மா நவராத்திரி மகிமை பற்றிச் சொற்பொழிவாற்றினார். மேற்படி நிலையத்தின் சார்பாக நடைபெற்றுவரும் இசைவகுப்பு மாணவர்கள் சரஸ்வதி தோத்திரம் பாடினர்கள்.

∴ ∴ ∴

உடுப்பிட்டி, ஞாயிறு

"ஓர் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு அவ்வூர் மக்களின் ஒத்துழைப்பு அவசியம். மாணவர்களின் வளர்ச்சியில் ஆசிரியர்களைவிட பெற்றார் கூடிய கவனம் எடுக்கவேண்டும். எந்தக்காரியத்தையும் அரசியல் ரீதியில் சிந்திக்கக்கூடாது. கைமாறு கருதாமல் இப்பாடசாலையை ஸ்தாபித்து சைவத்தின் வளர்ச்சிக்கு ஓர் ஒளிவிளக்காகத் திகழ்ந்த புலவர் சின்னத்தம்பியை எவரும் மறக்கமுடியாது. வடமராட்சியில் சைவத்தைப்பேணிவளர்க்கும் கல்லூரிகளில் முதன்மையாக விளங்கும் இக்கல்லூரி சகலதுறைகளிலும் ஒரு நடுநாயகமாய்த் திகழவேண்டும்."

அல்வாய் தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற கலை விழாவிற்கு தலைமைவகித்த சட்டகல்லூரி மாணவர் திரு. வீ. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு கூறினார்.

பண்டிதர் திரு. க. வீரகத்தி பேசுகையில், வாணி ஒருபோதும் நைவேத்தியங்களை விரும்பியதில்லையென்றும் கல்வியும் கலையும் பெருக்குவதே அவளது நோக்கமென்றும் கூறினார்.

பண்டிதர் திரு. எஸ். கே. நடராஜன் பேசுகையில், "தமிழ் கலைகளும் பண்பாடுகளும் படிப்படியாகப் புறக்கணிக்கப்பட்டு வரும் இவ்வேளையில் அவற்றை மீண்டும் ஒளிரச்செய்ய நாட்டின் சகல பண்டிதர், வித்துவான்களும், சைவப் புலவர்களும் முழுமுயற்சியுடன் ஈடுபடவேண்டும்" என்று கூறினார்.

ஆசிரியர் திரு. கந்தசாமியும் பேசினார். மாணவிகளின் சரஸ்பதி நடனம், கும்பி கோலாட்டம் முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

வனஜெந்துப் பரிபாலனப்பகுதி

1954 ம் ஆண்டுக்கு முன் அழுங்குச் செதிள்கள் ஏற்றுமதி செய்தல்

என், 2009—மேற்சொல்லப்பட்ட விஷயம் சம்பந்தமான முழுவிபரங்களுக்கும் தயவுசெய்து 23-10-64 தேதியைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

பதில் பாலகர்

## பேறுகால விடுதிகளின் அழுக்குத்துணிகளைச் சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரம்

பேறுகால விடுதிகளின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் மாநகரசபை ஆணையாளரால் 28-10-64-ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களைத் தாங்கி வரும் கடித உறையில் இடதுகரையின் மேல் பகுதியில் "பேறுகாலவிடுதிகளின் அழுக்குத்துணியை சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

தம்மால் சலவை செய்யப்பட்டு பேறுகால விடுதிகள் ஒவ்வொன்றுக்கும் விநியோகிக்கப்படவேண்டிய அழுக்குத் துணிகள் ஒவ்வொன்றிற்கும் துண்டு ரீதியாகத் தாம் கோரும் விகிதத்தை கேள்விக்காரர் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்வி முடிவு திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரருக்கு அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது குறித்தும், உடனடியாக வேலையை ஆரம்பிக்கும் படியும் அறிவித்தல் கொடுக்கப்படும்.

மாநகர ஆணையாளர் ஆகக் குறைந்த கேள்வியையோ, அல்லது வேறு எந்தக் கேள்வியையோ ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவர் அல்ல.

ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் பிணைப்பணமாக ரூபா 50-00 செலுத்தல் வேண்டும்.

ஒப்பம்: டி. டி. ஜெயசிங்கா,
ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
12-10-64 949

## ரூ. 1,000 அபராதம்

கொழும்பு, ஞாயிறு

தொழில் இலாகா அதிகாரி ஒருவரை அவரது கடமையைச் செய்யவிடாது தடுத்ததற்காக ஒரு கடைக்காரருக்குக் காலி நீதவான் திரு. சி. ஈ. மெண்டிஸ் ரூபா 1000 அபராதமும் 8 மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார். இந்த வழக்கில் எதிரிக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டுமென்றும் நீதவான் தெரிவித்தார்.

காணி கொள்ளும் சட்டம்
(460-ம் அதிகாரம்)
7-ம் பிரிவின்படி அறிவித்தல்

குறிப்பு இல. எவ். ஏ. | பி (B) | 36

கீழ்க்காணும் அட்டவணையில் உள்ள காணியை அரசாங்கம் ஈட்டவிருக்கின்றது. இதுசம்பந்தமாக ஏனைய விபரங்களுக்கு 14,200 இலக்க 16-10-64-ந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியின் 3-ம் பாகத்தைப் பார்க்கவும்.

அட்டவணை

1 கிராமத்தின் பெயர்: ஊவாமாகாணம், வதுளை மாவட்டம் உடுகின்ட காரியாதிகாரியின் பிரிவு. உடபலாத கோறளை கிறம்ப.

காணியின் பெயர்: சரி - தோட்டம். பட இலக்கம் கி. ப. 516 இன் துணைப் படம் இல. 2,

காணித் துண்டு இல. 248

விசாலம்: 2 ஏ. 2 று 3. 7 பே.

2. கிராமத்தின் பெயர்: ஊவாமாகாணம் வதுளை மாவட்டம் உடுகின்ட காரியாதிகாரியின் பிரிவு உடபலாத கோறளை நுகதலாவ.

காணியின் பெயர்: சரி-தோட்டம். பட இலக்கம் கி. ப. 518 இன் துணைப்படம் இல. 2. காணித்துண்டு இல: 155. விசாலம் 1 ஏ. 1 று. 0.5 பே.

ஒப்பம்: ஜி. எச். அபெயகுணசேகர,
உதவி அரசாங்க அதிபர்,
சட்டும் அதிகாரி வதுளை மாவட்டம்

எனது இல. இஅ.1 | 47
(460 ம் அத்தியாயக்) காணி கொள்ளும் சட்டம்
7-ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழேவிபரிக்கப்பட்டிருக்கும்காணியைப் பொதுத்தேவையொன்றிற்கென எடுத்துக் கொள்ளஎண்ணியிருக்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 16-10-64ம்திகதியின் 14,200 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

காணியின் பெயர்:தொம்பகஹவத்தை.

கிராமப் பெயர்:- மேல்மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை, தோட்டமுனை, பாணந்துறை நகரசபை எல்லைக்குள், 4-ம் வட்டாரம் உயன்-கெலே, பட்டிய தெற்கு.

துண்டு பட இல:- பிரதம படஇல. ஏ. 5340 இல் துண்டு 1

எல். ஐ. ஜே. சில்வா,
களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபர்.


### வரி விளம்பரம்

காணவில்லை

மட்டுவில் வடக்கில் வசிக்கும் முருகேசு கிருஷ்ணனந்தம் என்பவரை சில தினங்களாக காணவில்லை வயது 18. கறுப்பு நிறம். நீல சேட்டும், சாரமும் அணிந்து இருப்பார். தேடிக் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்

விலாசம்: சின்னப்பா முருகேசு, மட்டுவில் வடக்கு, 5-ம கட்டை, சாவகச்சேரி.

1029

பிரணவக் கொடி!

உலக முதல்வனின் கலைத் தத்துவங்களும், சிவதத்துவ நுட்பங்களும் அமைந்த, ஆதி வரலாற்றைப் பூரணமாக விளக்கும் கொடி! இதனின் சிறந்த விரிவுரை, ஒப்பற்ற முறையில் அமையிற்றப் படும். கலைநாளை எதிர்பாருங்கள். வித்துவக்கலைஞன் ஆசி. சாந்தகுரு, சன்மார்க்க தவகூடம், கந்தரோடை. 1033


சுழிபுரம், ஞாயிறு

சித்தங்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவில் சண்முகப் பெருமானின் குடமுழுக்கு விழா சனிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றது. தினமும் விசேட நிகழ்ச்சியாக, சமயச் சொற்பொழிவுகளும் வண்ணை சி. எஸ். எம். மணி பாகவதரின் பிரசங்கமும் மற்றும் மேளக்கச்சேரி, இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறுகின்றன. திங்கட்கிழமை இவ்வைபவம் முடிவடையும்.

## காயமடைந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தவர்களின் பெயர் பட்டியல் நாட்டின் சகல புகையிரத நிலையங்களிலும் வைத்திருக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

17 சடலங்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சடலங்களைப் பாதுகாத்து வைத்திருக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

துண்டிக்கப்பட்டிருந்த ரயில் சேவைகள் இப்பொழுது வழமைபோல நடைபெறுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம் மாநகரசபை பௌர்ணமி தினங்களில் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் அளித்து வரும் கலை நிகழ்ச்சிகளில் நாளை செவ்வாய்க் கிழமை "சோழனின் செல்வன்" என்னும் நாடகமும் நடைபெறவிருக்கிறது. வண்ணை ஸ்ரீ சரவணபவா நாடகமன்றம் அளிக்கும் இந்த நாடகத்தில் ஒரு கட்டம் இது. நாளைய நிகழ்ச்சிகளில் வித்துவான் அ. நமசிவாயத்தின் புல்லாங்குழல் இசையும் இடம்பெறும்.

# "வடக்கையும் கிழக்கையும் ஒன்ருக இணைத்தோம்

## தமிழரை சிங்களவராக்கும் திட்டம் கடைசிவரை ஈடேருது"

**— திரு. செல்வநாயகம்**

மாவிட்டபுரம், ஞாயிறு

"அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட பத்திரிகைமசோதா போல இலங்கைச் சரித்திரத்தில் ஒரு மசோதாவும் இவ்வளவு அநீதியான முறையில் கொண்டுவரப்படவில்லை. இம் மசோதா சர்வாதிகார ஆட்சிக்கு அடிகோலும். பாராளுமன்றத்திலுள்ள தமிழ்ப்பிரதிநிதிகள் இம் மசோதாவை எதிர்த்தே தீருவார்கள்."

நேற்றிரவு தாவடி பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர். இக் கூட்டம் வழக்கறிஞர் திரு. எம். மதியாபரணம் தலைமையில் நடைபெற்றது.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, அரசாங்கம் பத்திரிகை மசோதாவினுல் தனிய ஏரிக்கரைப் பத்திரிகையை மாத்திரம் பொறுப்பேற்றுவிட்டு மற்றப் பத்திரிகைகளை தொடர்ந்து தனித்து இயங்கவிடும் என்பது நிச்சயமில்லை.

பெற்ரேலியம் கூட்டு ஸ்தாபனம் ஆரம்பமாகியபோது பெற்ரோலை விலைக்கு வாங்கி விநியோகம் செய்வதென அரசாங்கம் தீர்மானித்தது. ஆனல் பின் நடந்தது என்ன வென்ருல் 'எஸ்ஸோ ஷெல், கல்டெக்ஸ்ஆகிய எண்ணெய்க் கம்பெனிகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. இதே நிலைதான் டைம்ஸ் பத்திரிகைக்கோ வீரகேசரிக்கோ, ஈழநாட்டிற்கோ, தவசா பத்திரிகைகளுக்கோ நிச்சயமாக வெகுவிரைவில் ஏற்படும். மக்களை எதிர்நோக்கியுள்ள இவ் வாபத்துப்பற்றி நாம் எச்சரிக்கை விடவேண்டியது எமது கடமையாகும்.

**கூட்டரசால்**

**எமக்கு நஷ்டம்**

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

கூட்டரசாங்கம்ஆரம்பமாகிய பொழுது தமிழர்களின் பிரச்னைகளை கூட்டு அரசாங்கம் தீர்க்குமென எதிர்பார்க்கப் பட்டது. ஆனல் கடந்தநான்கு மாத ஆட்சியை அலசி ஆராயும்போது எமது எண்ணமெல்லாம் வெறும் கனவு என இப்பொழுது நாம் உணருகிருேம்.

சிங்களத்தில் தேர்ச்சிபெருத அரசாங்க ஊழியர்கள் கட்டாய ஓய்வுபெற வேண்டும் என்ற சட்டம் கூட்டு அரசாங்கத்தின் பின்னரே கொண்டு வரப்பட்டது. தனிச்சிங்களச் சட்ட மசோதா தீவிரமாக அமுல்நடத்தப்படுகிறது. ஆனல் நியாயமான தமிழ் மசோதா கால எல்லையின்றி அமுல்நடத்தப்படாமல் நீடிக்கப்படுகிறது.

**கிரிதரை மசோதா**

உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-கிரிதாரை ஆலைவிவகாரத்தில் இரு முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன. முதலாவதக டாக்டர் என். எம். பெரேர இந்த ஆலைவிஷயமாக செய்துகொண்டுள்ள ஒப்பந்தப்படி அவர் பார்லிமெண்டில் இருக்க தகுதியுடையவரா, இல்லையா என்பதை உயர்நீதிமன்றம் தான் தீர்மானிக்கவேண்டும். ஆதலால் இது பற்றி பார்லிமெண்ட் தீர்மானிக்க முடியாததால் தான் நாங்கள் இம் மசோதாவை ஆதரிக்கவில்லை. இரண்டாவதாக டாக்டர் என். எம். பெரேரா முதலாளித்துவத்தைச் சேர்ந்தவரா அல்லது தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்தவரா என்பதைத் தீர்மானிப்பது. இப்பிரச்னையையும் பார்லிமெண்ட் தீர்மானிக்க முடியாது. இதைத் தீர்மானிக்கவேண்டியது பொதுமக்களே. எதிர்வரும் தேர்தலில் மக்கள் இதைத்தீர்மானிப்பார்கள். இதனுல்தான் நாம் நடுநிலைமை வகித்தோம்.

இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் "விடுதலைப் பரணி" என்னும் ஏடு வெளியிடப்பட்டது. இப்பத்திரிகையின் முதல் பிரதியை உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் பத்து ரூபா கொடுத்து காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின்மூலம் விற்பனையை ஆரம்பித்துவைத்தார்.

பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:- மேற்கு நாடுகளில் வேலை இல்லை என வீதிகளில் அலைவதை நான் பார்க்கவில்லை. குறிப்பாக இஸ்ரேல் நாட்டில் சில காலம் தங்கினேன். அங்கு நான் பார்த்தது என்னவென்ருல் ஆண், பெண், குழந்தை ஈருக எல்லோரும் வேலைசெய்கிருர்கள். ஹிட்லர் செய்த அநியாயம் தான் இன்று இஸ்ரேல் மக்களுக்கு விடுதலையைக் கொடுத்தது. அதேபோல் இன்று நாம் அநுபவிக்கும் இன்னல் எமக்கும் விடுதலை பெற வழிவகுக்கும் என்பது எனது திட நம்பிக்கை.

காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில்: "எமது கட்சி முக்கியமாக செய்தகாரியம் வடக்கு, கிழக்கு, மாகாணங்களை ஒன்ருக இணைத்தமையே அரசாங்கம் தமிழ் பேசும் மக்களை சிங்களவராக்க முயல்கிறது. இந்த இனக் கொலைத்திட்டத்தை எமது இறுதிமூச்சு உள்ளவரை எதிர்த்தே தீருவோம். வரப்போகும் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் எப்படி நடந்துகொள்ளப்போகிருர்களென்பதை உலகம் முழுவதும் அவதானித்துக்கொண்டிருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமையைப்பெறும் வகையில் வாக்களிப்பார்களென்று நம்புகிறேன்.

திரு. க. பொ. இரத்தினம் பேசுகையில் எங்கள் உரிமைகளைப்பெற்று உரிமையுடன் வாழ்வதற்கு நாம் ஓயாமல் போராடவேண்டிய நிலைமை வந்துள்ளது. எல்லோரும் இயன்ற அளவு துணிவாகப் போராடினுல்உரிமைபெறலாம் உரிமை போராட்டத்துக்குத் தமிழின விடுதலைக்கு உணர்ச்சி ஊட்ட உறுதிநல்க, உரம்பாய்ச்ச விடுதலைப் பரணி என்னும் ஏட்டையும் இன்று வெளியிடுகிருேம். இந்த ஏட்டை வளர்த்தல் உங்கள் கடமை பத்திரிகைகளின் தொண்டையும் பேராற்றலையும் நீங்கள் அறிவீர்கள் முப்பது லட்சம் தமிழரின் விடுதலைக்கு அயராமற் போராடும் தமிழரசுக் கட்சிக்குச் சொந்தமான ஓர்ஏடு இல்லாத குறையை நீக்க இந்த ஏட்டை வெளியிடுகிருேம்.

## இக்கேடா கண்டனம்

டோக்கியோ, அக். 18

சீன அணுக்குண்டு வெடித்திருப்பது ஆசியாவில் பெரும் அரசியல் பிரச்னையைத் தோற்றுவிக்கும் என ஜப்பான் பிரதமர் இக்கேடா கண்டனம் தெரிவித்திருக்கிருர்

—

## கோவையில் பொலிஸ் சூடு

கோயமுத்தூர், அக். 15

கோயமுத்தூரில் இன்று ஒரு அரிசி கடைமுன் கூடி கலவரம் நடத்திய கூட்டத்தை கலைக்க பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். முன்னுள் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் தலைமையில் சென்ற இந்தக் கும்பல் பின்பு பொலிஸ் ஸ்டேஷன் ஒன்றைக் கற்களால் தாக்கியது. இதன் விளைவாக ஒரு பொலிஸ்காரர் காயமடைந்தார். தற்பாதுகாப்புக்காக சப்-இன்ஸ்பெக்டர் ஒரு ரவுண்ட் சுட்டதில், முன்னுள் சப்-இன்ஸ்பெக்டர் மாண்டார். 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

—

## திறப்பு விழா

சங்கானை, ஞாயிறு

சங்கானைச் சிவபிரகாசவித்தியாசாலையின் புதிய மண்டபத் திறப்பு விழாவை வித்தியாதரிசிகர் திரு. ச. சபாபதி ஆரம்பித்து வைத்தார். பாடசாலை மாணவர்களினுல் பாடசாலைக் கீதம் பாடப்பட்டது. அதன்பின் முன்னைநாள் இலங்கைப் புகையிரதப் பகுதித் தலைவர் திரு. எட்வின் பினாக்கினுல் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபமும், வலிகாமம் மேற்கு காரியாதிகாரி திரு. டி. டபிள்யு. செல்வரத்தினத்தால் புதிதாக அமைக்கப்பட்ட காரியாலயமும் திறந்து வைக்கப்பட்டன. புதிய மண்டபத்தில் கல்விப்பகுதிக் கட்டடப் பரிசோதகர் திரு. க. தர்மலிங்கம் கலைமகள் படத்தை விளக்கேற்றித் திறந்து வைத்தார்.

வித்தியாதரிசிகர் திரு. ச. சபாபதி தலைமையில் நடைபெற்ற விழாவில் தலைமை ஆசிரியர் பண்டிதர் திரு. க. மயில்வாகனம், காரியாதிகாரி திரு. டி. டபிள்யு. செல்வரத்தினம் வித்தியாதரிசிகர் ச. சபாபதி பெற்ருர் ஆசிரியர் சங்கக்காப்பாளர்கள் திரு. த. பொன்னம்பலம், திரு. கார்த்திகேசு ஆகியோர் பேருரை நிகழ்த்தினர். இறுதியாகப் பெற்ருர் ஆசிரியர் சங்கச் செயலாளர் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது. இவ்விழாவில்அதிகமான பெற்ருேரும், பிள்ளைகளும் கலந்து கொண்டனர்.

—

## வில்ஸனுக்கு சாஸ்திரி பாராட்டு

புதுடில்லி, அக். 18

புதிய பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸனுக்கு இந்தியப் பிரதமர் சாஸ்திரி வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிருர். புதிய பிரதமர் தலைமையில் இந்திய-பிரிட்டிஷ் நல்லுறவு மேலும் வளரும் என்றும், வில்சன் போன்ற சிறப்புமிக்க தலைவர் பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்றிருப்பது பிரிட்டனின் அதிர்ஷ்டமே என்றும் அவர் கூறியிருக்கிருர்.

வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங், பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. கேஸ்டன் வாக்கருக்கு இதேபோல் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பி இருக்கிருர்.

—

புதுடில்லி, அக். 18

பகை நாகர்களுக்கெதிரான அரசாங்க நடவடிக்கை டிசம்பர் இறுதிவரை நீடிக்குமென அறிவிக்கப்பட்டது.

அன்புள்ள ச. ஜெயராசா

உமது தாயார் சுகயீனமுற்றிருக்கிருர். உம்மை உடனடியாக 117-ம் இலக்கம் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள உமது பாட்டி வீட்டுக்கு வரும்படி தயவாய் வேண்டுகிறேன். உமது சகோதரர்களும், உறவினர்களும் இதைக் கண்டதும் வருவீர் என எதிர்பார்க்கிருர்கள். ஜெயராசாவின் நண்பர்கள் இதைக்கண்டதும் தயவு செய்து அவருக்கு அறிவிக்கவும். உமது வரவை எதிர்நோக்கும் பாட்டி, திருமதி துரையப்பா. 1015

## அரசாங்க . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி)

செயற்குழு வலியுறுத்துகிறது.

அரசாங்கம் பாரதூரமான சட்டங்களைத் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். அதேநேரத்தில் நிர்வாக அதிகாரத்தை பரவலாக்கும் மாவட்டசபை மசோதாவை சமர்ப்பிப்பதில் வேண்டுமென்றே காலதாமதம் செய்வதைக் கவனிக்கிறது.

1956-ம் ஆண்டுக்குப்பின் அரசாங்க சேவையில் சேர்ந்த தமிழ் பேசும் எழுதுவினைஞர் சிங்களத் தேர்ச்சிபெருத காரணத்துக்காக 1965-ம் ஆண்டு வேலைநீக்கம்செய்ய மந்திரிசபை துணைக்குழு செய்துள்ள முடிவு அநீதியும் பாரபட்சமானதுமாகும்.

தமிழ் சிங்கள பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தவறியதை அரசாங்கத்துறைகளிலுள்ள ஊழியர்களை தெரிவு செய்வதில் தொடர்ந்து அரசாங்கம் காட்டிவரும் பாரபட்சப் போக்கிலும் மந்திரிசபைத் துணைக்குழுவின் மேற்கூறியமுடிவும்காட்டுகிறது இந்நாட்டு தமிழ்பேசும்மக்கள் இந்நாட்டுக்குரியவர்களாக அரசாங்கம் கருதவில்லையென்பதை சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிவிக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் பத்திரிகைகளை எடுக்கவும் கட்டுப்படுத்தவும் விடாப்பிடியாக எடுத்து வரும் முயற்சிகளை தமிழ் பேசும் மக்கள் முழு ஆற்றலுடன் எதிர்க்க வேண்டுமென்றும் இன்றேல் அரசாங்கத்தினது இனக்கொலைக் கொள்கைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பும் உரிமையை அவர்கள் இழந்து விடுவார்கள் எனறும் இச்செயற்குழு கூறுகின்றது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் சிங்கள தமிழ் இனங்களுக்கிடையே இணைக்க முடியாத பிளவை ஏற்படுத்துமென்றும் விரைவில் ஒரு கடுமையான போராட்டமும் அதனுல் நாட்டில் அமைதியின்மையும் தவிர்க்க முடியாதென்பதையும் கருதுகின்றது.

சிங்கள ஸ்ரீ பரிசீலனை சம்பந்தமாகக் கடந்த காலகொள்கையில் எவ்வித மாற்றமும் செய்யத் தேவையில்லை யென்றும் செயற்குழு தீர்மானிக்கிறது.

—

## ரூ. 30 கோடி வெள்ளநஷ்டம்

ஹைதராபாத் அக். 18

ஆந்திர பிரதேசத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 25 முதல் 30 கோடி ரூபாய்வரை நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

—

சங்கானை நிகர வைரவகோவில் முன்றலில் காந்திவிழா பண்டிதர் சி. வேலுப்பிள்ளை தலைமையில் இன்று மாலை 6 மணிக்கு நடைபெறும். திரு. அ. அமிர்தலிங்கம், திரு. கா. வேல்முருகன், திரு. மு. சிவானந்தம், நாவேந்தன், புதுமைலோலன் முதலியோர் கருத்துரை வழங்குவார்கள்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 6-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.